1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடு இருந்தபோது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அடையாளக் கார்டு வழங்கினார். தற்போது டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடும் இல்லை, அடையாளக் கார்டு வழங்கப்படுவதும் இல்லை.

சாண்டிநல்லா கோழிப்பண்ணை

*561 வினா—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகையில் சாண்டிநல்லா கோழிப்பண்ணையினை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உதகை சாண்டிநல்லா கோழிப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை. ஏனென்றால் அங்கு கோழிப் பண்ணையே இல்லை. (சிரிப்பு)

தண்டுமேட்டா கிராமத்தில் தெரு விளக்குகள்.

*562 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தாமரைப் பாக்கம் ஊராட்சியில் அடங்கிய தண்டுமேட்டா கிராமத்திற்கு இன்னும் தெரு மின்விளக்குகள் போடப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இவ்வேலை எப்போது நிறைவடையும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) தண்டு மேட்டா கிராமத்திற்கு இரண்டு குழல் விளக்குகள் (தெரு விளக்கு) போடப்பட்டு 29—8—1973 முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : நன்றியைச் சொல்லுகின்ற நேரத்தில், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊராட்சியிலும் எவ்வளவு விளக்குகள் எரிகின்றன, எவ்வளவு எரியவில்லை என்ற

கணக்கை அறிந்து அதை அந்தந்த ஆணையர்கள் தெரிவித்து உரிய முறையில் மின்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்து பழுதடையும் விளக்குகளைப் புதுப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மின்சார வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடமே இதை ஒப்புவித்துவிடலாம் என்ற யோசனை அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

Boring set in Thiruvalangadu Union.

* 563 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any boring set is being kept idle in Thiruvalangadu Panchayat Union in Tiruttani taluk; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள விவசாயிகள் துளை போடும் கருவியைப் பயன்படுத்த முன்வரவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் துளை போடும் கருவிகளை விவசாயிகள் பயன்படுத்த முன்வரவில்லை என்று சொன்னார்கள். அங்கிருக்கும் நிலைமை கடந்த பத்தாண்டுகளாக போரிங் செட் சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதற்கான நடவடிக்கையை அங்கிருக்கும் ஒன்றியம் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிலே தலையிட்டு போரிங் செட்டைச் சரி செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்காக 28,515 ரூபாய் 17 காசு கொடுத்து வாங்கப்பட்ட துளைபோடும் கருவி சரியாக இயங்காத காரணத்தாலும், மேலும் அந்தக் கருவிக்கு நாள் ஒன்றுக்கு வாடகை 60 கொடுக்க இயலாத காரணத்தாலும், அடிக்கடி பழுதடைந்து விடுகிறது என்ற காரணத்தாலும் பயன்படுத்த முடியாமல் இருந்தது. உழவர்களிடத்திலிருந்து குறைந்த வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து அது